


**30. 07. 2025**

## தலைப்பு செய்திகள்

**1.** பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்களை ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் மூலம் இந்தியா தகர்த்தபோது உலக நாடுகள் நன்றி தெரிவித்ததாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2. நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் ரயில் விபத்துகள் 77 சதவிகித அளவிற்கு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**3.** நிசார் செயற்கைகோள், **GSLV F-16** ராக்கெட் மூலம் இன்றுமாலை மணி 5.40க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

**4.** வணிகமயமாக்கலை ஊக்குவிப்பதே அறிவுசார் சொத்துரிமை மாநாட்டின் நோக்கம் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**5.** சீன மக்காவ் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு **Ayush Shetty** முன்னேறியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

**********

### நாடாளுமன்றம்

பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்களை ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் மூலம் இந்தியா தகர்த்தபோது உலக நாடுகள் நம் நாட்டிற்கு நன்றி தெரிவித்ததாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் தொடர்பான சிறப்பு விவாதத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர் பாகிஸ்தானின் பஹவல்பூர் மற்றும் முரிடிக் பகுதிகள் பல தசாப்தங்களாக சர்வதேச தீவிரவாத மையங்களாக செயல்பட்டது அவர் எடுத்துரைத்தார்.

தீவிரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் நிறுத்தும் வரை சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மாநிலங்களவையில் ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் குறித்த விவாதம் இன்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முன்னதாக இன்றுகாலை பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மாநிலங்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் பீகார் வாக்காளர் பட்டியல் விவகாரத்தை வைத்து, எதிர்கட்சிகள் அரசியல் செய்வதாக குற்றம் சாட்டினார்.

இவ்விவகாரம் தேர்தல் ஆணையத்திற்கு உட்பட்டது என்றும், இப்பிரச்சனையில் எதிர்கட்சிகளின் அமளி, ஆர்பாட்டம் முறையானது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு.எஸ்.பி.சிங் பாகேல் பேசுகையில் ஜனநாயகத்தை வலுப்படுத்தி நாட்டின் நலனை முன்னெடுத்துச்செல்லும் வகையில் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தங்களை மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

வெளிநாட்டு சக்திகளின் ஆதரவுடன் நம் நாட்டின் ஜனநாயகத்திற்கு ஊறுவிளைவிக்க I.N.D.I கூட்டணி கட்சிகள் முயல்வதாக அவர் குற்றம் சாட்டினார்.

**********

**அஷ்விணி வைஷ்ணவ்**

நாட்டில் ரயில் விபத்துகள் பெருமளவு குறைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர் 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது விபத்துகள் 77 சதவிகிதம் குறைந்ததாக எடுத்துரைத்தார்.

பயணியர் பாதுகாப்பிற்கு அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக கூறிய அவர், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட தானியங்கி ரயில்பாதுகாப்பு கவாச் புதிய தொழில்நுட்ப முறையால் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

**********

**ஜோதிர் ஆதித்யா சிந்தியா**

தகவல் தொழில்நுட்ப செயலியான Sanchar Sathi மூலம் ஒரு கோடியே 36 லட்சத்திற்கும் அதிகமான போலி கைப்பேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாக மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்யா சிந்தியா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அமைச்சர், இந்த செயலியில் 35 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் புகார்கள் அளித்துள்ளதாகவும், இதன்கீழ் 21 லட்சத்திற்கும் அதிகமான திருடப்பட்ட கைபேசிகள் கண்டறியப்பட்டு 5 லட்சத்திற்கும் அதிகமான கைபேசிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறினார்.

தொலைதொடர்பு ஆதாரங்களை முறைகேடாக பயன்படுத்துவோர் குறித்த தகவல்களை பகிர்ந்துகொள்ள மின்னணு அறிவு சார் தளம், உருவாக்கப்பட்டுள்ளதாக கூறிய அமைச்சர், இதன்கீழ் வங்கிகள், நிதிநிறுவனங்கள், பாதுகாப்பு முகமைகள் தொலைதொடர்பு சேவை வழங்குபவர்கள் உட்பட 620 அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

**********

**நிசார் செயற்கைகோள்**

ஸ்ரீஹரி கோட்டா சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து, புவி கண்காணிப்பிற்கான நிசார் செயற்கைகோள், **GSLV F-16** ராக்கெட் மூலம் இன்றுமாலை மணி 5.40க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இதற்கான 27அரை மணி நேர கவுண்ட் டவுன் தற்போது சுமூகமாக நடைபெறுகிறது.

2 ஆயிரத்து 392 கிலோ எடை கொண்ட நிசார் செயற்கைகோள், வானிலை மாற்றங்கள் குறித்த தரவுகளை துல்லியமாக வழங்கும் வகையில் இஸ்ரோவும், நாசாவும் இணைந்து வடிவமைத்துள்ளன.

**GSLV F-16** ராக்கெட் இந்த செயற்கைகோளை சூரிய சுற்றுவட்ட பாதையில் நிலைநிறுத்த உள்ளது குறிப்பிடத்தக்கது.

**********

**விருது**

2026ஆம் ஆண்டு பத்ம விருதுகளுக்கான நியமனங்கள் மற்றும் பரிந்துரைகளுக்கான கால அவகாசம் வரும் 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ராஷ்ட்ரிய புரஸ்கார் இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்படும் நியமனங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டு பத்ம விருதுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் வரும் குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படும்.

கல்வி, சமூகசேவை, மகளிர் முன்னேற்றம், உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் அளப்பரிய சேவை புரிந்தவர்களை கவுரவிக்கும் வகையில் பத்ம விருதுகள் வழங்கப்படுகின்றன.

**********

**உதயநிதி ஸ்டாலின்**

தமிழ்நாட்டில் வணிகமயமாக்கலை ஊக்குவிக்கும் நோக்கில் அறிவுசார் சொத்துரிமை மாநாடு நடத்தப்படுவதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் சென்னையில் Innovative in Tamil Nadu மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்றார்.

புதிய தொழில்நுட்பங்களுக்கு உயர்முன்னுரிமை அளித்து வருவதாக கூறிய அவர், மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை பெரும் வளர்ச்சி கண்டுவருவதாக கூறினார்.

நான்முதல்வன் திட்டத்தின் மூலம் தமிழக மாணாக்கர் தகவல் தொழில்நுட்பத்துறையில் பல்வேறு சாதனைகளை புரிந்துவருவதாகவும், அவர் எடுத்துரைத்தார்.

தமிழகத்தை அறிவுசார் சொத்துரிமை தலைநகராக மாற்ற இம்மாநாடு வகை செய்யும் என்றும் திரு.உதயநிதி தெரிவித்தார்.

ஆராய்ச்சியாளர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், தொழில்துறை முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

**********

**சக்கரபாணி**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சேலம் மண்டலம் சார்பில் 8 புதிய வழிதடங்களில் கூடுதல் பேருந்துகளை மாநில உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.சக்கரபாணி இன்று தொடங்கிவைத்தார்.

ஓசூரிலிருந்து, பாகலூர், பேரிகை, அத்திப்பள்ளி உள்ளிட்ட இடங்களுக்கு இயக்கப்படும் இந்த புதிய வழிதட பேருந்துகளின் மூலம் தொழிலாளர்கள், மாணாக்கர் பெரிதும் பயனடைவர் என்றார்.

**********

**கலந்தாய்வு**

தமிழகத்தில் MBBS BDS மருத்துவ படிப்புகளுக்கான கலந்தாய்வு இன்று தொடங்கியது.

சிறப்பு பிரிவு மற்றும் ஏழரை சதவிகித உள் இட ஒதுக்கீட்டின் கீழ் அரசு பள்ளி மாணாக்கருக்கான கலந்தாய்வு சென்னை அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் தற்போது நடைபெற்று வருகிறது.

மாணாக்கர் சேர்க்கை ஒதுக்கீட்டு விவரங்கள் வரும் 6ஆம் தேதி இணையதளத்தில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான தர வரிசை பட்டியலில் 39 ஆயிரத்து 853 மாணாக்கர் இடம்பெற்றுள்ளனர்.

இதனிடையே மருத்துவம் சார்ந்த துணை பட்டப்படிப்புகளுக்கான கலந்தாய்வு இணையதளம் வாயிலாக இன்று தொடங்குகிறது.

மாணாக்கர் தாங்கள் விரும்பும் கல்லூரிகளை வரும் சனிக்கிழமை வரை பதிவு செய்யலாம்.

**********

**மெய்யநாதன்**

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையாரின் 140ஆவது பிறந்த நாளை ஒட்டி அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை

அமைச்சர் திரு.மெய்யநாதன் இன்று, மாலைஅணிவித்து மரியாதை செலுத்தினார்.

**********

**இருவரி**

**தமிழகத்தில் ஊரக வளர்ச்சி துறையில் சாலை** ஆய்வாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான கலந்தாய்வு வரும் 4ஆம் தேதி தொடங்கி 7ஆம் தேதிவரை நடைபெறும் என்று அரசு பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

**பெரம்பலூர் கால்நடை பல்கலைகழக பயிற்சி** மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கரவை மாடு வளர்ப்பு குறித்த இலவச ஒருநாள் பயிற்சி நாளை நடைபெறுகிறது.

இதில் இனப்பெருக்க மேலாண்மை நோய் தடுப்பு முறை பராமரித்தல் உள்ளிட்டவை குறித்த பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

**சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட** தொழில்மையம் மூலம் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கம் திட்டத்தின் கீழ் 259 பயனாளிகளுக்கு மூன்றரை கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

**********

**மேட்டூர்**

**மேட்டூர் அணையிலிருந்து வெளியேற்றப்படும் நீரின்** அளவு 50 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

அணையின் நீர்மட்டம் அதன் முழு கொள்ளளவான 120 அடியாக நீடிக்கிறது.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று** வினாடிக்கு 88 ஆயிரம் கன அடியாக குறைந்துள்ளது.

**********

**ராணிப்பேட்டை**

மத்திய அரசின் ஜென்மன் திட்டத்தின் கீழ் குடிசை வீடுகள் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டத்தின் கீழ் பயனடைந்த ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த பயனாளி எமது செய்திப்பிரிவிடம் பேசுகையில்

**வாய்ஸ்**

**********

**வாரசந்தை**

ஆடி பெருக்கு விழா வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி கள்ளக்குறிச்சி உளுந்தூர் பேட்டை வார சந்தையில் 3 கோடி ரூபாய்க்கு மேல் ஆடுகள் விற்பனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**********

**கோவில்**

கன்னியாகுமரி அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோவில் ஆடி மாத நிறை புத்தரிசி பூஜை இன்று நடைபெற்றது.

இதில் கோவில்களுக்கு சொந்தமான வயல்களிலிருந்து அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

**பேட்மிண்டன்**

சீன மக்காவ் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் **Ayush Shetty** முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆட்டத்தில் அவர் - தைவானின் **Yu Kai Huang-** ஐ 21-10 21-11 என்ற செட்களில் வென்றார்.

**********

**டென்னிஸ்**

கஜகஸ்தான் சேலஞ்சர்கோப்பை டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் கரண்சிங் முன்னேறியுள்ளார்.

காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரஷ்யாவின் இவானை 6-3 7-6 என்ற செட்களில் அவர் வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் முகுந்த் சசிகுமார் ஜார்ஜியாவின் அலெக்ஸாண்டர் பக்சியை **தற்போது எதிர்கொண்டுள்ளார்.**

**********

**கிரிக்கெட்**

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் ஓவலில் நாளை தொடங்குகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் தற்போது முன்னிலையில் உள்ளது

**********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**